# 5 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோருக்கான Water Smart® துணையுதவிக் குறிப்புகள்.

## கனடாவின் உயிர்காப்பு நிபுணத்துவ நிறுவனமான - Lifesaving Society யிடமிருந்து



**நீரில் மூழ்குதல் குறித்து**

- 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கேற்படும், தவிர்க்கப் படக்கூடிய இறப்புகளில், இரண்டாவதாக முன்னணி வகிக்கும் காரணி, நீரில் மூழ்குதலாகும்.
- ஒவ்வோராண்டும் கனடாவில் ஏறக்குறைய 500 பேர் நீரில் மூழ்குகின்றனர்.
- நீரில் மூழ்குதல் ஒரு விரைவான, மௌனமான கொலையாளி. ஒரு குழந்தை 10 செக்கன்களிலும் நீரில் மூழ்க முடியும். பாதிப்புக்குள்ளாவோர் உதவிக்கென அரிதாகவே கூப்பிடுகிறார்கள், கையசைக்கிறார்கள், சமிக்ஞையிடுகிறார்கள். ஏனெனில் நீருக்கு மேலாகத் தமது தலைகளை அவர்களால் தூக்க முடியாது.
- நீரில் மூழ்கிப் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளில் அரைவாசிக்கும் அதிகமானோர் தனிமையில் இருந்துள்ளார்கள்.

**பெற்றோர்களே, உங்கள் பிள்ளையின் உயிர்காப்பாளர்கள் நீங்களே.**

- நீச்சல் வகுப்புகளில் உங்கள் குழந்தைகளைப் பதிவு செய்யுங்கள். குறைந்தபட்சம், ஆழமான நீரில் உருளுவதற்கும், 1 நிமிடம் கவனமாகக் கால் பதிக்கவும், 50 நிமிடம் நீந்தவும் என, Lifesaving Societyஇன் Swim to Survive தராதரத்தை எய்தக்கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.
- உயிர்காப்பாளர்களது கண்காணிப்பிலுள்ள பகுதிகளில் நீந்துங்கள். உயிர்காப்பாளர்கள் இல்லாத பகுதிகளில் வயதுவந்தோரது கவனமான கண்காணிப்பு இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். பின்வளவு நீச்சல் குளத்தில், வயதுவந்தவர் ஒருவரைக் ”காவலுக்கு” அமர்த்தி வையுங்கள்.
- ஒருபோதும் தனியாகவின்றி, எப்போதும் ஒரு நண்பருடனேயே நீந்த வேண்டும் என உங்கள் குழந்தைகளுக்கு வலியுறுத்துங்கள்.
- பலவீனமானோர் அல்லது நீந்தத் தெரியாதோர், மிதக்கும் உயிர்காப்பு மேற்சட்டை அணிய வேண்டும் என்பதை ஒரு விதி ஆக்குங்கள்.
- பயிற்சியைப் பெறுங்கள். குடும்ப உறுப்பினர்கள் உயிர்காப்புத் திறன்களைக் கற்பதை உறுதி செய்யுங்கள்.

LIFESAVING SOCIETY
*The Lifeguarding Experts*

சகல குழந்தைகளும் நீந்தக் கற்கவேண்டும். அவர்களுக்கு எங்களால் கற்பிக்க முடியும். மேலதிக தகவல்களுக்குப் பார்வையிடுக, www.lifesavingsociety.com அல்லது உங்கள் பகுதி நீச்சல் குளத்தினருடன் தொடர்பு கொள்க.

® Water Smart என்பது Royal Life Saving Society Canada வின் ஒரு பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறியீடாகும்.